## அறிஞர் அண்ணா கல்லூரி (கலை மற்றும் அறிவியல்), கிருஷ்ணகிரி

தேதி: 28-10-2025

### சுற்றறிக்கை

பெரியார் பல்கலைக்கழக பருவத் தேர்வு (நவம்பர் - டிசம்பர் 2025) தேர்வு எழுதும் அனைத்து மாணவர்களும் பின்வரும் விதிகள் மற்றும் விதிமுறைகளை கண்டிப்பாக கடைபிடிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்:

1. அனைத்து மாணவர்களும் தேர்வுக்கு வரும்பொழுது தேர்வு நுழைவுச் சீட்டு மற்றும் கல்லூரி அடையாள அட்டையை கட்டாயமாக எடுத்து வரவேண்டும்.

2. தேர்வறைக்குள் மொபைல் போன்கள், ஸ்மார்ட் கடிகாரங்கள், கால்குலேட்டர்கள் (அனுமதிக்கப்படாவிட்டால்) அல்லது எந்த மின்னணு சாதனங்களையும் எடுத்துச் செல்வது கண்டிப்பாக தடைசெய்யப்பட்டுள்ளது.

3. தேர்வு தொடங்குவதற்கு குறைந்தது 30 நிமிடங்களுக்கு (காலை 9.30க்குள்) முன்னதாக மாணவர்கள் தேர்வறைக்குள் வர வேண்டும்.

4. எக்காரணத்தைக் கொண்டும் தேர்வு நேரத்தில் வெளியே அனுமதிக்கப்படமாட்டாது.

5. தேர்வு முடியும் நேரத்திற்கு முன்பு தேர்வறையை விட்டு வெளியேற அனுமதிக்கப்படாது.

6. மாணவர்கள் கருப்பு பெல்ட் மற்றும் கருப்பு முழுகாலணி (BLACK SHOE) மற்றும் சரியான கல்லூரிச் சீருடையில் தேர்வுக்கு கண்டிப்பாக வகைப்புரிதல் வேண்டும்.

7. தேர்வறைக்கு உள்ளேயும் வெளியேயும் அமைதியையும் ஒழுக்கத்தையும் கடைப்பிடிக்கவும்.

8. அனுமதிக்கப்பட்ட எழுதுப் பொருட்களைத் தவிர வேறு ஏதேனும் எழுதப்பட்ட அல்லது அச்சிடப்பட்ட பொருட்களை வைத்திருப்பது தவறான செயலாகக் கருதப்பட்டு கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

9. தேர்வு எழுத கருப்பு அல்லது நீல மை பேனாக்களை மட்டுமே பயன்படுத்தவும்.

10. எழுதத் தொடங்குவதற்கு முன் தங்கள் விடைத்தாள்களில் அச்சிடப்பட்ட அனைத்து விவரங்களையும் சரிபார்க்கவும்.

11. விடைத்தாள்களில் தங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் கையொப்பமிடவும்.

12. விடைத்தாள்களில் உங்கள் பதிவு எண், பாடக் குறியீடு மற்றும் தேதியை தெளிவாகச் சரிபார்க்கவும்.

13. ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்தது 25 வரிகள் எழுதப்பட வேண்டும்.

14. வினாத்தாள் அல்லது விடைத்தாள்களில் பதில்களைத் தவிர வேறு எதையும் எழுதவோ குறிக்கவோ கூடாது.

15. விடைத்தாள் சமர்ப்பிக்கும் முன் பயன்படுத்தப்படாத பக்கங்களை குறுக்கு கோடிடவும்

16. விடைத்தாள்களில் எழுதப்பட்ட மொத்த பக்கங்களின் எண்ணிக்கையை குறிப்பிட்டு சரிபார்த்த பின்னரே விடைத்தாள்களை அறை கண்காணிப்பாளரிடம் சமர்ப்பிக்கவும்.

17. மாணவர்கள் சரியான சீருடையும் மற்றும் சிகை அலங்காரத்துடன் (HAIR CUT) வரவேண்டும்.

18. மாணவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே அமர வேண்டும்.

19. தேர்வு அறைக்குள் ஏதேனும் தவறான நடத்தை, பேசுதல் அல்லது பொருட்களை பரிமாறிக்கொள்வது முறைகேடாகக் கருதப்படும்.

20. மேற்கண்ட விதிகளை மீறினால் பல்கலைக்கழக மற்றும் கல்லூரி விதிமுறைகளின்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பருவத் தேர்வுகள் சீராக நடைபெறுவதை உறுதிசெய்ய அனைத்து மாணவர்களும் மேற்கண்ட வழிமுறைகளை கண்டிப்பாகப் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

உங்கள் அனைவருக்கும் வெற்றி பெற வாழ்த்துக்கள்!

28/10/14

முதல்வர்

PRINCIPAL
ARIGNAR ANNA COLLEGE
(ARTS & SCIENCE)
KRISHNAGIRI-635 115

நகல்:

1. தேர்வுப் பிரிவு.
2. துறைகள்.

ARIGNAR ANNA COLLEGE (Arts & Science) ★ Krishnagiri-635 115. ★